**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

**<u>சாதாரணக் கூட்டப்பொருள்</u>**

2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**<u>பொருள்கள்</u>**

| மாமன்ற கூட்ட தேதி | | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 31.01.12 | 1. | இம்மாநகராட்சி அலுவலர் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக சென்னை மற்றும் இதர வெளியூர்களுக்கு சென்று வந்ததற்கான பயணத் தொகை மற்றும் இதரப் படிகள் ஆகியவற்றை ஜனவரி 2012 முதல் டிசம்பர் 2012 வரை ஓர் ஆண்டு காலத்திற்கு உரிய விதிமுறைகளின்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனுக்குடன் வழங்கவும், அதற்கான அதிகார அளிப்பை தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு எண் 13இன்படி மாநகராட்சி ஆணையருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>பி4/021789/09 | 1) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. | தூத்துக்குடி மாநகராட்சியின் பிரதான சாலைகள், மேம்பாலம் மற்றும் நகரின் முக்கிய தெருக்களில் உரிய அனுமதியின்றி சுற்றித்திரியும் ஆடு மற்றும் மாடுகள் போன்ற கால்நடைகள் பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாகவும், போக்குவரத்திற்கு இடையூராகவும் மற்றும் பொது சுகாதாரக் கேடு விளைவிக்கும் விதமாகவும் உள்ளன. அதனால் அவற்றை உரிய உரிமம் பெற்று சொந்த இடத்தில் வைத்து பராமரிக்கும் பொருட்டு அறிவுறுத்தும் வகையில் வாடகை ஆட்டோ மூலம் அறிவிப்பு செய்த வகைக்கு செலவு தொகையாக ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>குறிப்பு:</u>** அனுமதிக்கலாம் எச்4/15232/2011 | 2) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3. | இம்மாநகராட்சி பராமரிப்பிலுள்ள புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், ஸ்டேட் பாங்க் காலனி மகப்பேறு மையம், குருஸ்புரம் மகப்பேறு மையம் மற்றும் அரசு மருத்துவமனை அருகில் பகுதி II திட்டம் 2011–12ன் கீழ் மாற்று திறனாளிகளுக்கான கழிப்பிட கட்டுமான பணிக்கு 21.12.2011ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 22551/P1/2011–12 நாள் 24.08.2011ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | 3) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1. திரு கே.முத்துராமன், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு 4.86% அதிகம் — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br><br>2. திரு ஐ. ஜெயசீலன், ஒப்பந்தகாரர் — மதிப்பீட்டிற்கு 4.97% அதிகம் — டேவணித்தொகை செலுத்தியுள்ளார்<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:**<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக கொடுத்திருந்தனர். மேலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு கே.முத்துராமன் ஒப்பந்தகாரரிடம் விலை குறைப்பு கோரியதில் 4.75% அதிகமாக கொடுத்துள்ளார். எனவே மேற்கண்ட ஒப்பந்தகாரர் திரு கே.முத்துராமன் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.75% அதிகமாக உள்ளதை மாமன்றம் ஒப்புக் கொள்ளலாம். கூடுதல் செலவினம் மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யலாம்.<br><br>ம.ப.எண் 162/2011–12 | |
| | 4. தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பிலுள்ள திரேஸ்புரம் பள்ளிவாசல் தெரு, மலர் மண்டபம் அருகில், ஹார்வி புரம் மற்றும் டெலிபோன் காலனி பகுதிகளில் மழைநீர் அதிக அளவு தேக்கம் அடைந்து சாலைகள் மற்றும் வீடுகளில் வெள்ளநீர்ப்புக தொடங்கியுள்ளது. எனவே மேற்படி பகுதியில் தேங்கியுள்ள மழைநீரினை ஆயில் இஞ்சின் மூலம் பம்பிங் செய்து வெளியேற்றும் பணிக்கு செலவுத் தொகை மதிப்பீடு ரூ.62692/– மாநகராட்சி விதி எண் 15ன்படி செலவு செய்யப்பட்டது மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்<br>ம.ப.எண் 181/2011–12 | 4) அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது |
| | 5. இம்மாநகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரிந்த திரு சி.ராஜாமணி என்பவருக்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் 1733/2002/சி2 நாள் 10.11.2011ன்படி 31.03.2006 முதல் ஓய்வு பெற அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி தனியர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகையாக ரூ.2960/– அதற்கான வட்டித் தொகை ரூ.9933/– ஆக மொத்தம் ரூ.12893/–ஐ அன்னாருக்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>சி2/14574/2011 | 5) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 6. இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள பிரையண்ட்நகர் 7வது தெருவில் பட்டுப்போன பனைமரம் ஒன்று உள்ளது. அது போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி பனைமரத்தை ஏலம் விட்டு அப்புறப்படுத்துவதற்கும், மேற்படி ஏலத்திற்கு உரிய ஏலப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை எடுப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>இ5/16085/11 | 6) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 7. தூத்துக்குடி மாநகராட்சியானது 25.10.2011 முதல் முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, மீளவிட்டான், சங்கரப்பேரி, தூத்துக்குடி ரூரல் ஆகிய 5 பஞ்சாயத்துகளை உள்ளடக்கி மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட 5 பஞ்சாயத்துகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் சீரான முறையில் இல்லாததால் பஞ்சாயத்து பகுதி பொதுமக்கள் சீரான குடிநீர் வேண்டி போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். | 7) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

தற்போது தூத்துக்குடி மாநகராட்சிக்கு 4வது குடிநீர் குழாய் திட்டம் அமைப்பதற்கு அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட 5 பஞ்சாயத்துகளின் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் வல்லநாடு தாமிரபரணி ஆற்றுபடுகையில் புதியதாக நீர் சேகரிப்பு கிணறு அமைத்து அதன் மூலம் சுமார் 5000 lpm குடிநீர் பம்பிங் செய்து தற்போது இயக்கப்படாமல் உள்ள இரண்டாவது பைப் லைன் 400 எம்எம் CI குழாய் மூலம் வல்லநாடு தெப்பத்தில் குடிநீர் தேக்கி 600 எம்எம் RCC குழாய் மூலம் தூத்துக்குடி மாநகர்க்கு கூடுதலாக குடிநீர் கொண்டு வந்து தற்காலிக தீர்வு காண தயார் செய்யப்பட்ட பின்வரும் பட்டியலில் கண்டுள்ள மதிப்பீடு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சம்) |
|---|---|---|
| 1 | தாமிரபரணி ஆற்றுப் படுகையில் நீர் சேகரிப்பு கிணறு மற்றும் நடைபாலம் அமைத்தல் | 98.00 |
| 2. | நீர் சேகரிப்பு கிணற்றுக்கு தேவையான பம்ப் மற்றும் மின் மோட்டார் பொருத்தும் பணி | 65.00 |
| 3. | நீர் சேகரிப்பு கிணறு பகுதியில் புதிய 315 KVA மின்மாற்றி அமைத்து மின் இணைப்பு பெறுதல் | 35.00 |
| 4. | நீர் சேகரிப்பு கிணறு பகுதியில் புதிய 320 KVA ஜெனரேட்டர் அமைத்தல் | 35.00 |
| 5. | நீர் சேகரிப்பு கிணற்றில் இருந்து வல்லநாடு தெப்பம் வரை 400 மி.மீ. விட்டம் இருப்பு குழாய் பதிக்கும் பணி | 370.00 |
| 6. | வாகைகுளம் மற்றும் புதுக்கோட்டை பகுதியில் சேதமடைந்த 600 எம்.எம் RCC குழாய்களுக்குப் பதில் புதிய 600 மி.மீ. விட்டம் இரும்பு குழாய் பதிக்கும் பணி | 195.00 |
| | மொத்தம் | 798.00 |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1) 5 பஞ்சாயத்துகளின் பொது மக்களின் நலன் கருதி வல்லநாடு தாமிரபரணி ஆற்றுப்படுகையில் புதிய நீர் சேகரிப்பு கிணறு அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு அங்கீகரிக்கலாம்.
2) பட்டியலில் கண்டுள்ள வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள மதிப்பீடு தொகையினை மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) வரிசை எண் 5 மற்றும் 6 வரை உள்ள மதிப்பீடு தொகைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் நிர்வாக அனுமதி பெறலாம்.

இ3/00462/2012

8. இம்மாநகராட்சி பகுதியில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட சாலை பழுதுகளை தற்காலிகமாக மேம்படுத்த கீழ்க்கண்ட 11 சாலை பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 14/65486/2011 நாள் 23.12.2011ல் ரூ.99.89 லட்சம் அனுமதிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கியுள்ள பணிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

8) அலுவலகக் குறிப்பின்படி பதிவு செய்யப்பட்டது

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சம்) |
|---|---|---|
| 1 | போல்டன்புரம் சாலையில் தார்சாலை அமைத்தல் 1 முதல் 170 மீட்டர் | 9.98 |
| 2 | போல்டன்புரம் சாலையில் தார்சாலை அமைத்தல் 165 மீட்டர் | 9.90 |
| 3 | காமராஜ் சாலையில் தார்சாலை அமைத்தல் 221.50 மீட்டர் | 9.97 |
| 4 | ஸ்டேட்பாங்க் காலனி 60 அடி சாலையில் தார்சாலை அமைத்தல் 281 மீட்டர் | 9.85 |
| 5 | ஸ்டேட் பேங்க் காலனி 60 அடி சாலையில் தார்சாலை அமைத்தல் 280 மீட்டர் | 9.80 |
| 6 | பண்டு கரை ரோடு (3வது மைல் ரோடு) சாலையில் தார்சாலையில் அமைத்தல் (450 மீட்டர்) | 9.45 |
| 7. | பண்டு கரை ரோடு (3வதுமைல் ரோடு) சாலையில் தார்சாலையில் அமைத்தல் (350 மீட்டர்) | 7.35 |
| 8. | ஆதிபராசக்தி நகரில் தார்சாலை அமைத்தல் (247 மீட்டர்) | 5.20 |
| 9. | மேலரெங்கநாதபுரத்தில் தார்சாலை அமைத்தல் (249.80 மீட்டர்) | 9.57 |
| 10. | பாலவிநாயகர் தெருவில் தார்சாலை அமைத்தல் (130 மீட்டர்) | 9.97 |
| 11. | சின்னமணி நகர் பூங்கா அருகில் தார்சாலை அமைத்தல் (421 மீட்டர்) | 8.85 |
| | **மொத்தம்** | **99.89** |

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம்

இ1/14913/2011

9. தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவியர்கள் குறிப்பாக மாநகராட்சி பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாநகராட்சி மூலம் ஜின்பேக்டரி ரோடு மாநகராட்சி பள்ளியில் வைத்து, இந்திய ஆட்சி பணி (IAS Acadamy) சம்பந்தமான பயிற்சி இலவசமாக வழங்க தகுதிவாய்ந்த ஒரு பயிற்சி நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு, பயிற்சியினை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான கட்டமைப்பு வசதிகள் செய்வதற்கு கல்வி நிதியினை பயன்படுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்6/00463/12

9) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

10. தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான மேற்கு மண்டலம் சுகாதாரப் பிரிவு 13 அமைந்துள்ள இராஜாஜி பூங்கா மேல் பகுதியில் வார்டு அலுவலக முகப்பு பகுதியில் உள்ள புங்கை மரம் ஒன்று சரிந்து கீழே விழும் நிலையில் உள்ளது. மேலும் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் மேற்கு பகுதியில் உள்ள பூவரசு மரம் ஒன்று பட்டுப்போய் பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது. எனவே மேற்படி மரங்களை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்துவதற்கும், அதற்கு உரிய ஏலப் புள்ளிகள் பெற்று நடவடிக்கை எடுப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ5/16085/11

10) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>11.</td>
<td>
இம்மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள 28 இண்டர்காம் மற்றும் EPABX சிஸ்டத்தில் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புகளுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுவதற்கு கீழ்க்காணும் விவரப்படி மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1.</td><td>மெசர்ஸ் எஸ்ஸார் மார்க்கெட்டர்ஸ், திருநெல்வேலி</td><td>ரூ.20500/–</td></tr>
<tr><td>2.</td><td>மெசர்ஸ் ஐஸ்வர்யா டெலிகாம்,<br>திருநெல்வேலி</td><td>ரூ.22750/–</td></tr>
<tr><td>3.</td><td>மெசர்ஸ் மூர்த்தி எண்டர்பிரைசஸ்<br>திருநெல்வேலி</td><td>ரூ.23500/–</td></tr>
</table>
மேற்படி மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் எஸ்ஸார் மார்க்கெட்டர்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தார் மற்றவர்களை விட மிகக் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.20,500/–க்கு கொடுத்துள்ளார்கள். எனவே மேற்படி நிறுவனத்தாரின் மேற்படி விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
இ5/16243/11
</td>
<td>11) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>12.</td>
<td>
சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 22551/பி1/11–3 நாள் 03.11.2011 பகுதி 2ன் திட்டத்தின் கீழ் பாதாளச் சாக்கடை சுத்தம் செய்ய ஜெட்ராட் இயந்திரம் வாங்குவதற்கு ரூ.30.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 07.12.2011ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட 3 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.
1) TPS INFRASTRUCTURE LTD. CHENNAI<br>2) KAMAVIDA ENVIORNING (P) LTD, PUNE<br>3) INDUSTRIAL PLANTS & WASTE TREATMENT CORN. MADURAI
மேற்படி பணிக்கு கேட்கப்பட்ட தொழில்நுட்ப ஆவணங்களில் வரிசை எண் 2ல் உள்ள நிறுவனத்தார் முழுமையாக சமர்ப்பித்துள்ளார். அதனடிப்படையில் KAMAVIDA ENVIORNING (P) LTD, PUNE அவர்கள் ஒப்பந்தப்புள்ளி 23.12.2011 அன்று திறக்கப்பட்டது. இதில் அவர் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ.3297965.00 கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டது. அதனடிப்படையில் ஒப்பந்தகாரர் KAMAVIDA ENVIORNING (P) LTD, PUNE ரூ.2990000/–க்கு செய்ய சம்மதத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் அனுமதிக்கலாம்.
இ1/14078/2011
</td>
<td>12) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>13.</td>
<td>
சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 23125/இ3/2011 நாள் 20.09.2011ல் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு நவீன திட்டத்தின் கீழ் ரூ.1375.50 லட்சத்திற்கு 34 சாலைப் பணிகளும் 3 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 28.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி 3 சிப்பங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டது. அதில் சிப்பம் எண் 1க்கு கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை வைத்து ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது
</td>
<td>13) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 1) மெசர்ஸ் இம்மானுவேல் அன்.கோ, தூத்துக்குடி<br>2) திரு வி.தங்கராஜ், தூத்துக்குடி<br><br>மேற்படி பணிக்கு வரிசை எண் 2ன் ஒப்பந்ததாரர் திரு வி.தங்கராஜ், தூத்துக்குடி அவர்கள் வகுப்பு எண் 4.1.A 4ன்படி ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ரத்து செய்யப்பட்டது. மேலும் வரிசை எண் 1ல் உள்ள மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ, தூத்துக்குடி நிறுவனத்தார் முழுமையாக சமர்ப்பித்துள்ளார். அதனடிப்படையில் மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ, தூத்துக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி 20.01.2012 அன்று திறக்கப்பட்டது. இதில் அவர் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ.44616112/– (மதிப்பீட்டு தொகையை விட 6.82 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டது. அதனடிப்படையில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். இம்மானுவேல் அன்கோ, தூத்துக்குடி அவர்கள் ரூ.43487252.00 (மதிப்பீட்டு தொகையை விட 4.12 சதவீதம் அதிகம்) விலைக் குறைப்பு கொடுத்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தினை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/11607/1 | |
| | 14. சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 23125/இ3/2011 நாள் 20.09.2011ல் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு நவீன திட்டத்தின் கீழ் ரூ.1375.50 லட்சத்திற்கு 34 சாலைப்பணிகளும் 3 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 28.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி 3 சிப்பங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டது. அதில் சிப்பம் எண் 2க்கு கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை வைத்து ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது.<br><br>1) திரு எஸ். சுதர்சன், தூத்துக்குடி<br>2) திரு எஸ். ரம்போலா, தூத்துக்குடி.<br><br>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இதில் 2 ஒப்பந்தப்புள்ளிகளும் உரிய தொழில்நுட்ப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்பட்டியல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. இதில் குறைந்த ஒப்ந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ்.சுதர்சன், தூத்துக்குடி அவர்கள் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ.49584420.40 (மதிப்பீட்டை விட 5.98 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு ஒப்பந்ததாரரிடம் விலைக் குறைப்பு கேட்கப்பட்டது. அதனடிப்படையில் ஒப்பந்ததாரர் திரு எஸ்.சுதர்சன், தூத்துக்குடி அவர்கள் ரூ.49117781.15 (மதிப்பீட்டை விட 4.98 சதவீதம் அதிகம்) விலை குறைப்பு கொடுத்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல்செலவினத்தினை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/11607/11 | 14) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 15. | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 23125/இ3/2011 நாள் 20.09.2011ல் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு நவீன திட்டத்தின் கீழ் ரூ.1375.50 லட்சத்திற்கு 34 சாலைப்பணிகளும் 3 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 28.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி 3 சிப்பங்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டது. அதில் சிப்பம் எண் 3க்கு கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை வைத்து ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது.<br><br>1) மெசர்ஸ். இம்மானுவேல் அன்கோ, தூத்துக்குடி<br>2) திரு வி. தங்கராஜ், தூத்துக்குடி.<br><br>மேற்படி பணிக்கு வரிசை எண் 2ன் ஒப்பந்ததாரர் திரு வி.தங்கராஜ், தூத்துக்குடி அவர்கள் வகுப்பு எண் 4.1.A 4ன்படி ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை ரத்து செய்யப்பட்டது. மேலும் வரிசை எண் 1ல் உள்ள மெசர்ஸ் இம்மானுவேல் அன்கோ, தூத்துக்குடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி 20.01.2012 அன்று திறக்கப்பட்டது. இதில் அவர் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ.50060703.50 (மதிப்பீட்டு தொகையை விட 9.81 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டது. அதனடிப்படையில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். இம்மானுவேல் அன்கோ, தூத்துக்குடி அவர்கள் ரூ.47604276.50 (மதிப்பீட்டு தொகையை விட 4.42 சதவீதம் அதிகம்) விலைக் குறைப்பு கொடுத்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>**அலுவலகக் குறிப்பு**</u>: மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தினை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/11607/11 | 15) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 16. | இம்மாநகராட்சியில் பணிபுரியும் திரு க.ராஜேஸ் பாஸ்கர், இளநிலை உதவியாளர் என்பவர் தனது திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் ரூ.10000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ.10000/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>**அலுவலகக் குறிப்பு**</u>: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>பி4/689/12 | 16) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 17. | நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011ல் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்ட கண்ணோட்டம் 2011–12ம் நிதியாண்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதின் பிரகாரம் மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ல் அரசு முழு மானியத் தொகை பெற்று கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அரசாணை எண் 6 நாள் 17.01.2012 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் சாலைப்பணிகளுக்கு ரூ.500.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட ஒவ்வொரு பணிகளும் எடுத்துச் செல்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 17) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

| வரிசை எண் | சாலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1. | சுந்தரராமபுரத்தில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு | 40.00 |
| 2. | பூபாலராயர்புரத்தில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 11.70 |
| 3. | வடக்கு பிள்ளையார் கோவில் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 5.60 |
| 4. | ஜார்ஜ் ரோடு தொடர்ச்சியில் (புல்தோட்டம் வரை) தார்சாலை அமைக்கும் பணிக்கு | 37.90 |
| 5. | டூவிபுரம் (சட்டமன்ற அலுவலகம் சுற்றி) தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு | 29.50 |
| 6 | அம்பேத்கார் காலனி மற்றும் சுடலை காலனியில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு | 26.70 |
| 7. | சிவன்கோவில் தெருவில் (பாலகிருஷ்ணா தியேட்டர்) தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு | 47.60 |
| 8 | தெற்கு புதுத்தெருவில் (பள்ளிவாசல் வளாகம் முதல் தினத்தந்தி அலுவலகம்) தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு | 24.00 |
| 9. | தமிழ்நாடு மெர்க்கண்டையில் வங்கி காலனியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 37.90 |
| 10. | கீழரெங்கநாதபுரத்தில் (சி.எம்.பள்ளி) தார்சாலை அமைக்கும் பணிக்கு | 13.00 |
| 11 | ஆசிரியர் காலனி மெயின் ரோடு மற்றும் 2வது தெருவில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு | 34.00 |
| 12 | காளியப்பர் தெருவில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு | 16.25 |
| 13 | பால்பாண்டி நகர் 4வது தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 6.70 |
| 14. | லூர்தம்மாள்புரத்தில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 17.30 |
| 15. | சுந்தரவேல்புரம் வடக்கில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 10.15 |
| 16. | கிருஷ்ணராஜபுரத்தில் (அன்னை வேளாங்கன்னி நகர்) சிமின்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 16.00 |
| 17. | அழகேசபுரம் குறுக்கு தெருவில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 22.85 |
| 18. | நம்மாழ்வார் தெரு, கருப்பசாமி தெரு மற்றும் முத்து தெருவில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 39.90 |
| 19. | இந்திரா நகர், ஜார்ஜ ரோடு (சுமங்கலி திருமண மண்டபம் எதிர்புறம்) சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 13.25 |
| 20 | மணகாவலன் தெரு, ராமர் விளை தெருவில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 13.25 |

| | | |
|---|---|---|
| 21. | மகிழ்ச்சிபுரத்தில் (பக்கிள் ஓடை மேற்கு பக்கம்) சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 12.50 |
| 22. | தாமோதரநகர் குறுக்கு தெருவில் சிமெண்ட் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 16.15 |
| 23 | சுந்தர்நகரில் (முத்தையாபுரம்) சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு | 7.80 |
| | மொத்தம் | 500.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/14912/2011

18. நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011ல் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்ட கண்ணோட்டம் 2011–12ம் நிதியாண்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதின் பிரகாரம் மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ல் அரசு முழு மானியத் தொகை பெற்று கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அரசாணை எண் 6 நாள் 17.01.2012 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு ரூ.93.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட பணிகள் எடுத்துச் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1. | டியூப்லைட் பெருத்தும் வகைக்கு (மின்கம்பம், மின் கடத்தி, மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் மற்றும் டியூப் லைட் ஒருங்கினைப்பிற்கான சோக், ஸ்டார்டர் வகைக்கு) 629 எண்ணங்களுக்கு | 70.44 |
| 2. | சோடியம் வேப்பர் லைட் பொருத்தும் வகைக்கு (மின் கம்பம், மின் கடத்தி, மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் மற்றும் டியூப் லைட் ஒருங்கிணைப்பிற்கான சோக், ஸ்டார்டர் வகைக்கு) 110 எண்ணங்களுக்கு | 7.70 |
| 3. | உயர் கோபுர மின் விளக்கு (வஉசி சாலை மற்றும் திருச்செந்தூர் சாலையில்) 2 எண்ணங்கள் அமைப்பதற்கு | 11.00 |
| 4. | இதர பணிகளுக்கு | 3.66 |
| | **மொத்தம்** | **93.00** |

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/14912/2011

18) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

19. நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011ல் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்ட கண்ணோட்டம் 2011–12ம் நிதியாண்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதின் பிரகாரம் மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ல் அரசு முழு மானியத் தொகை பெற்று கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அரசாணை எண் 6 நாள் 17.01.2012 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் மழைநீர்

19) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

வடிகால் தொடர்பான பணிகளுக்கு ரூ.200.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட பணிகள் எடுத்துச் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1. | சிதம்பரநகர் மெயின் சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, சிறு பாலங்கள் மற்றும் கான்கீரிட் சுவர் அமைக்கும் பணிக்கு | 65.00 |
| 2. | வி.வி.டி. சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, சிறு பாலங்கள் மற்றும் கான்கீரிட் சுவர் அமைக்கும் பணிக்கு | 103.00 |
| 3. | பாலவிநாயகர் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, சிறு பாலங்கள் மற்றும் கான்கீரிட் சுவர் அமைக்கும் பணிக்கு | 32.00 |
| | மொத்தம் | 200.00 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/14912/2011

20. நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011ல் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்ட கண்ணோட்டம் 2011–12ம் நிதியாண்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதின் பிரகாரம் மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011ல் அரசு முழு மானியத் தொகை பெற்று கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்த மாமன்றம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அரசாணை எண் 6 நாள் 17.01.2012 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிகளுக்கு ரூ.376.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட பணிகள் எடுத்துச் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | |
|---|---|---|
| 1. | டம்பர் பின் 148 எண்ணங்களுக்கு | |
| 2. | மூன்று சக்கர வாகனங்கள் 112 எண்ணங்களுக்கு | |
| 3. | டம்பர் பிளேசர் 8 எண்ணங்களுக்கு | |
| 4. | கம்பாக்டர் 2 எண்ணங்கள் | |
| 5. | கம்பாக்டர் பின் (1.00 கியூபிக் மீட்டர்) 60 எண்ணங்கள் | |
| 6. | சுற்றுச் சுவர் (980 மீட்டர்) | |
| | மொத்தம் | |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/14912/2011

20) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

21. சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 22551/பி1/11–3 நாள் 03.11.2011 பகுதி 2ன் திட்டத்தின் கீழ் பாதாளச் சாக்கடை சுத்தம் செய்ய தூர்வாரும் இயந்திரம் 2 எண்ணம் வாங்குவதற்கு ரூ.11.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 07.12.2011ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது.

21) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | 1) Front Line Engineering Services, Chennai<br><br>மேற்படி பணிக்கு கேட்கப்பட்ட தொழில்நுட்ப ஆவணங்களில் வரிசை எண் 1ல் உள்ள நிறுவனத்தார் முழுமையாக சமர்ப்பித்துள்ளார். அதனடிப்படையில் Front Line Engineering Services, Chennai அவர்கள் ஒப்பந்தப்புள்ளி 27.12.2011 அன்று திறக்கப்பட்டது. இதில் அவர் சமர்பபித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை தூர்வாரும் இயந்திரம் 1 எண்ணம் வாங்குவதற்கு ரூ.836152/– ஆகும். இது மதிப்பீட்டுத் தொகையை விட மிக அதிகமாக இருந்த காரணத்தால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/14078/2011 | |
| | 22. தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள சஙகரப்பேரி, மீளவிட்டான், அத்திமரப்பட்டி, முத்யைாபுரம், தூத்துக்குடி ரூரல் ஆகிய 5 பஞ்சாயத்துகளையும் இணைத்து ஒருஙகிணைந்த குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 40808/2008/WS3, நாள் 24.01.2011இல் 5 பஞ்சாயத்துகளுக்கும் சேர்த்து புதிய ஒருஙகிணைந்த கூட்டு குடிநீர் 4 வது குடிநீர் திட்டம் செயல்படுத்த, வாணண்ட்ஸ் சொல்யூசன், சென்னை என்ற தொழில் நுட்ப ஆலோசகர் நிறுவனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>அதன்பேரில் வாயண்ட்ஸ் சொல்யூசன் (பி) லிமிட், சென்னை தொழில்நுட்ப ஆலோசக நிறுவனத்தின் மூலம் இடைக்கால ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டு, மேற்படி இடைக்கால ஆய்வறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலகத்தில் 22.07.2011 அன்று நடைபெற்ற தொழில்நுட்ப ஆய்வு கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.<br><br>மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் எண். ந.க.எண். ஊநி8/4918/2011, நாள் 16.08.2011 & 20.09.2011 மேற்படி 5 பஞ்சாயத்துகளுக்கும் 4வது பைப் லைன் குடிநீர் திட்டம் செயல்படுத்த +வல்லநாடு பகுதியில் உள்ள தாமிரபரணி ஆற்றுபடுகையில் உள்ள மருதூர் அணைக்கட்டு, கொஙகராயக்குறிச்சி, மற்றும் திருவைகுண்டம் ஆகிய பகுதிகளில் தாமிரபரணி ஆறு வடிநிலக்கோட்டம் பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், சம்பந்தப்பட்ட =ஊராட்சி மன்ற தலைவர்கள், நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியோருடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தல ஆய்வின் முடிவில் தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள 5பஞ்சாயத்துகளுக்கும் மருதூர் கால்வாயில் இருந்து மேற்படி குடிநீர் திட்டம் செயல்படுத்தலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.<br><br>தற்போது வாயண்ட்ஸ் சொல்யூசன் (பி) லிமிட், சென்னை தொழில்நுட்ப ஆலோசக நிறுவனத்தின் மூலம் மேற்படி 5 பஞ்சாயத்துகளுக்கும் 4வது பைப் லைன் குடிநீர் திட்டம் செயல்படுத்த +வல்லநாடு பகுதியில் உள்ள தாமிரபரணி ஆற்றுபடுகையில் உள்ள மருதூர் அணைக்கட்டு பகுதியில் இருந்து செயல்படுத்த ரூ266.03 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட வரைவு மதிப்பீட்டு அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அ.கு : மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>இ3 / 22751 / 2008 | 22) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |

23. வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வல்லநாடு தெப்பம் பகுதியில் குடிநீரை சேகரித்து தூத்துக்குடி மாநகர பகுதிக்கு வரும் குடிநீர் விநியோகத்தில் , மேற்கண்ட தெப்பம் பகுதியில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு மாநகர பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு குடிநீர் விநியோகத்தை அதிகரிக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறு தற்போது உபயோகமில்லாமல் தூர்ந்து போய் உள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குடிநீர் விநியோகம் குறித்த ஆலோசனை கூட்டத்தில் மேற்படி ஆழ்துளை கிணற்றினை சீரமைத்து மீண்டும் குடிநீர் விநியோகம் செய்ய அறிவுரை வழஙகப்பட்டது. அதன்பேரில் மேற்கண்ட பயனற்ற நிலையில் உள்ள ஆழ்துளை கிணற்றினை சீர் செய்திடவும், புதிய குழாய் அமைத்தல், மின்சார பணிக்கு தேவையான பேனல் போர்டு மற்றும் ஸ்டார்டர்கள், கேபிள்கள் ஆகியன பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 140000/– க்கும் மற்றும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** மாநகர பொது மக்களின் நலனை கருத்திற்கொண்டும், கூடுதல் தேவையான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு மதிப்பீடு மற்றும் செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

இ3 / 1206 / 2012

23) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

24. தூத்துக்குடி மாநகராட்சி கணினி வசூல் மையத்தில் பணம் எண்ணும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் தற்போது முதல் கட்டமாக இரண்டு எண்ணம் புதிய பணம் எண்ணும் இயந்திரம் வாங்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி புதிய இயந்திரத்தை இம்மாநகராட்சிக்கு விநியோகம் பண்ணுவதற்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | இயந்திரம் எண்ணிக்கை | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ் சாஜோப் எலக்ட்ரானிக்ஸ், மதுரை–1 | 1 | ரூ. 11450/– (வாட் வரிகள் சேர்த்து) |
| 2. | மெசர்ஸ் அரவிந்த் எலக்ட்ரானிக்ஸ், மதுரை | 1 | ரூ. 13740/– (வாட் வரிகள் சேர்த்து) |

மேற்காணும் விவரப்படி பெறப்பட்ட இரண்டு எண்ணம் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் சாஜோப் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தார் மற்ற நிறுவனத்தாரை விட மிகக் குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.11450/–க்கு விலைப்புள்ளி கொடுத்துள்ளார்கள். எனவே மேற்படி நிறுவனத்தாரின் மேற்படி விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஏற்கனவே இம்மாமன்றம் மேற்படி இயந்திரங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.24000/–க்கு தனது 29.12.12ம் தேதிய 507ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளது.

இ5/14866/11

24) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | 25. இம்மாநகராட்சிக்கு சொந்தமான குருஸ்புரம் பகுதியில் பல்நோக்கு சமுதாய கூடம் கட்டிடம் ரூ.26.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த குடிசை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 11.03.2009இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப் பணியினை ஒப்பந்தகாரர் திரு கே.வேலாயுதம் அவர்களுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணி அவர்களுக்கு தரப்பட்டது. மேற்படி பல்நோக்கு சமுதாய கூடம் கட்டுவதற்கு இடம் பிரச்சனை காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் கோரியபடி உடன் பணியை துவக்க இயலவில்லை. மேலும் மேற்படி பணியின் ஒப்பந்தகாரர் தற்போது காலமாகிவிட்டபடியால் பணியினை தொடர இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தகாரரின் பணி மற்றும் பதிவினை ரத்து செய்யலாம். மேலும், மேற்கண்ட பணிக்கு தற்போதைய பொதுப்பணித்துறை விலை விபரப்பட்டியல் 2011–2012இன்படி, தயார் செய்யப்பட்டுள்ள திருத்திய மதிப்பீடு 29.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>__அலுவலகக் குறிப்பு__:<br>1) ஒப்பந்ததாரர் திரு கே.வேலாயுதம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மற்று பதிவினை ரத்து செய்யலாம்<br>2) மேற்கண்ட பணிக்கான திருத்திய மதிப்பீடு ரூ.29.50 இலட்சத்திற் மாமன்றம் அனுமதிக்கலாம். கூடுதல் செலவினம் பொது நிதியில் செல செய்யவும் அனுமதிக்கலாம்.<br><br>இ5/14866/11 | 25) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |
| | 26. இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, புது தில்லி, மத்திய அரசு அரசிதழ் சிறப்பு வெளியீடு பகுதி II பிரிவு 3 உட்பிரிவு (ii) அறிவிக்கை S.O.705 (E) நாள் 02.09.1999இன்படியும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, மத்திய அரசு அரசிதழ் சிறப்பு வெளியீடு அறிவிக்கை S.O.249 (E) நாள் 04.02.2011இன்படியும் மறு சுழற்சி செய்யத் தக்க பிளாஸ்டிக்ஸ் தயாரித்தல் மற்றும் உபயோகப்படுத்துதல் விதிகள் 1999 மற்றும் பிளாஸ்டிக் கழிவு (நிர்வாகம் மற்றும் பயன்படுத்துதல் விதிகள்) 2011 உருவாக்கப்பட்டு பிளாஸ்டிக்ஸ் பொருட்களின் பயன்பாடு வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>இம்மன்றத்தின் 29.12.2011ம் தேதிய சாதாரணக் கூட்டம் தீர்மானம் எண் 505இன் தொடர்ச்சியாக பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பிளாஸ்டிக்ஸ் தயாரித்தல், விற்பனை மற்றும் பொது மக்கள் பிளாஸ்டிக்ஸ் பயன்படுத்துதல் குறித்து பொது அறிவிப்பு செய்ய மன்றம் தீர்மானிப்பது குறித்த முடிவுக்கு<br><br>• கேரி பைகள் (Carry Bags) என்பது வாணிபச்சரக்குகுள் கொண்டு செல்வதற்கும், வழங்குவதற்கும் சொந்த உபயோக பயன்பாடுகளுக்குமான அனைத்து வகையான பிளாஸ்டிக் பொருளால் ஆன பைகள் என பொருள்படும். ஆனால் பயன்பாட்டிற்கு முந்தைய நிலையில் பொருட்களை கட்டுவதற்காக அல்லது அடைப்பதற்காக, இணையான ஒரு பொருளாக பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகள் இந்த வரையறைக்குள் பொருந்தாது.<br>• உணவுப் பொருட்கள் (Food Stuffs) என்பது உண்பதற்கு தயாராக உள்ள உணவு தயாரிப்புகள், பாஸ்ட் புட், திரவ நிலையிலோ, பவுடர் நிலையிலோ, திட நிலையிலோ அல்லது பகுதி திட நிலையிலோ உள்ள பதப்படுத்தப்பட்ட அல்லது சமைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் என பொருள்படும்.<br>• வாணிபச்சரக்குகள் (Commodities) என்பது காய்கறிகள் பழங்கள், மருத்துவப்பொருட்கள், உணவு தானியங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்கள் ஆகும். | 26) அலுவலகக் குறிப்பின்படி தீர்மானிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | • பல அடுக்கு பிளாஸ்டிக் (Multilayered Plastics) என்பது காகிதம், காகித அட்டை, பாலிமரிக் பொருட்கள், உலோகப் பொருட்களால் ஆன ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்கு அல்லது அலுமினியத்தால் ஆன மிக மெல்லிய தகடு ஆகியவை உள்ளிட்ட அவற்றைப் போன்ற பொருட்களால் செய்யப்பட்ட ஒன்றுக்கு மேற்படி கட்டு அல்லது அழுத்தத்தினாலான கட்டமைப்பு என பொருள்படும்.<br><br>• பிளாஸ்டிக் கழிவு (Plastic Waste) என்பது பயன்படுத்தப்பட்டு அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆயுட்காலம் முடிவுற்று கழிக்கப்பட்ட அனைத்து வகையான பிளாஸ்டிக் தயாரிப்பு என பொருள்படும்.<br><br>• கேரி பைகள் மற்றும் சிறிய பைகள் உற்பத்தி, இருப்பில் வைத்தல், வினியோகம், விற்பனை மற்றும் பயன்படுத்தும் பொழுது பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br><br>  • உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், குடிநீர் ஆகியவற்றுக்கான கேரி பைகள் வெள்ளை நிறத்திலோ அல்லது இந்திய தரக்கட்டுப்பாடு IS 9833:1981இன்படியும் அவ்வப்போது அரசால் நிர்ணயிக்கப்படும் வரையறுக்கப்பட்ட நிறமிகளால் தயாரிக்கப்பட்ட நிறத்திலோ அமையப்பெற வேண்டும்.<br><br>  • எந்த ஒரு நபரும் மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களால் ஆன கேரி பைகளை உணவுப் பொருட்களை சேகரிப்பதற்கோ, சுமப்பதற்கோ, வழங்குவதற்கோ அல்லது பொருட்களை கட்டுவதற்கோ உபயோகப்படுத்தக்கூடாது.<br><br>  • எந்த ஒரு நபரும் 40 மைக்ரான் அளவுக்கு குறைவான தடிமன் அளவிலான புத்தம் புதிய கேரி பைகள், மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள், மட்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் (Compostable Plastics) பொருட்களால் ஆன கேரி பைகளை தயாரிப்பதோ, இருப்பில் வைப்பதோ, வினியோகம் செய்வதோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது.<br><br>  • குட்கா, புகையிலை மற்றும் பான்மசாலா ஆகியவற்றை பிளாஸ்டிக் பொருட்களால் ஆன சிறிய பைகளில் (Sachets) இருப்பில் வைக்கவோ, கட்டுமானம் செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ கூடாது.<br><br>  • பிளாஸ்டிக் பொருட்களை மறு சுழற்சி செய்தலுக்கான வழிமுறையான இந்திய தரக்கட்டுப்பாடு IS 14534:1998 வழிமுறைகளின்படியும் அவ்வப்போது திருத்தப்படும் சட்ட விதிகளின்படியும் மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கேரி பைகள் முறையாக இருத்தல் வேண்டும்.<br><br>  • மட்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் (Compostable Plastics) பொருட்களுக்கான தெளிவான குறிப்புகளான இந்திய தரக்கட்டுப்பாடு IS/ISO 17088:2008 வழிமுறைகளின்படியும் அவ்வப்போது திருத்தப்படும் சட்ட விதிகளின்படியும் மட்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் கேரி பைகள் முறையாக உருவாக்கப்பட வேண்டும்<br><br>• பிளாஸ்டிக் பொருட்களால் ஆன ஒவ்வொரு கேரி பைகளிலும், பல அடுக்கு கட்டுகளிலும் (Multilayered Plastics) ஆங்கிலம் அல்லது உள்ளூர் மொழியில் பின்வரும் தகவல்கள் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். | |

| | | |
|---|---|---|
| | • தயாரிப்பாளரின் பெயர், பதிவு எண் விவரம் மற்றும் கேரி பைகளுக்கான தடிமன் விவரம்<br>• பல அடுக்கு கட்டுகளில் (Multilayered Plastics) தயாரிப்பாளர் பெயர் மற்றும் பதிவு எண் விவரம்<br>• மறு சுழற்சி செய்யத்தக்க பிளாஸ்டிக் பொருட்களுக்கான வழிமுறைகள் இந்திய தரக்கட்டுபாடு IS/ISO 14534:1998 வழிமுறைகளின்படியும் அவ்வப்போது திருத்தப்படும் சட்டவிதிகளின்படியும் கேரி பைகள் “மறு சுழற்சி செய்யப்பட்டது'' என்பதற்கான முத்திரை அல்லது குறியீடு ஒவ்வொரு மறு சுழற்சி செய்யப்பட்ட கேரி பைகளிலும் அமையப்பெற வேண்டும்.<br>• மட்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் (Compostable Plastics) பொருட்களுக்கான தெளிவான குறிப்புகள் இந்திய தரக்கட்டுப்பாடு IS/ISO 17088:2008 வழிமுறைகளின்படியும் மட்கும் தன்மை கொண்ட பிளாஸ்டிக் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு கேரி பையிலும் “மட்கும் தன்மை கொண்டது'' என்பதற்கான முத்திரை இடம் பெற்றிருக்க வேண்டும்.<br>• விற்பனையாளர்கள், தங்களால் விற்பனை செய்யப்படும் பிளாஸ்டிக் கேரி பைகள் மற்றும் பல அடுக்கு கட்டுப்பொருட்களில் மேற்சொன்ன வழிமுறைகளின்படி குறியீடுகள் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.<br>• பிளாஸ்டிக் கேரிபைகள் மற்றும் பல அடுக்கு கட்டுப்பொருட்களை (Multilayered Plastics) தயாரிக்கும் எந்த ஒரு நபரும் உரிய முறையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு விண்ணப்பித்து முறையான உரிமம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் பெற்றிருக்க வேண்டும்.<br>• பிளாஸ்டிக் பொருட்களை மறு சுழற்சி செய்யும் அல்லது செய்ய உத்தேசிக்கும் எந்த ஒரு நபரும் உரிய முறையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு விண்ணப்பித்து முறையான உரிமம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் பெற்றிருக்க வேண்டும்.<br>• உரிமம் பெறப்படாமல் எந்த ஒரு நபரும் கேரி பைகள் மற்றும் மறு சுழற்சி செய்யத்தக்க பிளாஸ்டிக் பொருட்கள் அல்லது பல அடுக்கு கட்டுப் பொருட்கள் (Multilayered Plastics) உற்பத்தி செய்தல் கூடாது.<br>• எந்த ஒரு கேரி பையும் நுகர்வோருக்கு விலையில்லாமல் விற்பனையாளர்களால் வழங்கப்படுதல் கூடாது.<br>• பிளாஸ்டிக் கேரி பைகள் மற்றும் பல அடுக்கு கட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் மற்றும் உற்பத்தி செய்யும் எந்த ஒரு நபரும் அப்பொருட்களின் கடைசி ஆயுட்காலம் வரை சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் மேற்படி பொருட்கள் அமையப்பொறுவததை உறுதி செய்ய வேண்டும். இப்பொறுப்பானது மேற்படி பொருட்களை, கட்டுவதற்கு உபயோகிக்கும் அனைத்து தயாரிப்பாளர்களுக்கும் பொருந்தும். (Extended Producer`s Responsibility) மேற்படி தயாரிப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகள் இறுதி நிலையில் பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்குத் தேவையான நிதியினை ஈடு செய்ய வேண்டும்.<br>• மேலும் இந்திய அரசால் பிளாஸ்டிக் பொருட்கள் குறித்த பத்தி எண் 1இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் தொடர்பாக இந்திய அரசால் அவ்வப்போது திருத்தப்படும் விதிமுறைகளின்படியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். | |

| | | |
|---|---|---|
| | • இவ்விதிமுறைகளை மீறுபவர்களுக்கு பின்வரும் விவரப்படி அபராதம் விதிக்கப்படும்.<br><br>**<u>நகர்ப்புற உள்ளாட்சிகள்</u>**<br>மொத்த விற்பனையாளருக்கு – ரூ. 1,000/–<br>சில்லறை வியாபாரிகளுக்கு அபராதம் – ரூ. 500/–<br>உபயோகிப்பவர்களுக்கு அபராதம் – ரூ. 100/–<br>பிளாஸ்டிக் கழிவுகளை பிரித்து ஒப்படைக்காத நிறுவனங்கள் – ரூ. 100/–<br>பிளாஸ்டிக் கழிவுகளைப் பிரித்து ஒப்படைக்காத தனிநபர்/ வீடுகள் – ரூ. 25/–<br>**<u>ஊரக உள்ளாட்சிகள்</u>**<br>தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 245(1) திருத்தப்பட்ட இணைப்பு பட்டியல் IIஇன்படி தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக்ஸ் பொருட்களை பொதுச் சாலைகளில் அல்லது பொது இடங்களில் விதிமுறைகளுக்கு முரணாக விற்பனை செய்தால் ரூ.200/– (ரூபாய் இருநூறு மட்டும்) அபராதம் விதிக்கப்படும்.<br>தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 243இன்படி தொடர்ந்து விதியை மீறி நடந்து குற்றமென தீர்ப்பாகிய நாளிலிருந்து அப்படி மீறி நடந்து கொண்டு போகிற ஒவ்வொரு தினத்திற்கும் ரூ.15/– (ரூபாய் பதினைந்து) மேற்படாமல் நிர்ணயித்து அபராதம் விதிக்கப்படும்.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: தீர்மானிக்கலாம்<br>எச்1/14677/10 | |
| | 27. சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித எண் 38607/பி2/2011 நாள் 24.08.2011ல் உள்கட்டமைப்பு ஈடு செய்யும் மற்றும் பொது நிதி ரூ.51.25 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 19.01.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டது.<br><br>1) JAM Enviro Equipment, Chennai<br>2) Good care enviro system (P) Ltd., Chennai<br><br>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ட் உறை திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இதில் வரிசை எண் 2ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி உரிய தொழில்நுட்ப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Good Care Enviro Systmen (P) Ltd., Chennai அவர்கள் சமர்ப்பித்துள்ள விலைப்புள்ளி தொகை ரூ.4739172/– (மதிப்பீட்டை விட 0.11 சதவீதம் குறைவு) கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டது. அதனடிப்படையில் ஒப்பந்தகாரர் Good Care Enviro Systmen (P) Ltd., Chennai அவர்கள் ரூ.4737813/– (மதிப்பீட்டை விட 0.14 சதவீதம் குறைவு) விலை குறைப்பு கொடுத்ததை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதி வழங்கலாம்<br>எச்1/14677/10 | 27) அலுவலகக் குறிப்பின்படி அனுமதிக்கப்பட்டது |